13.7 NOV 2021 ✓
...அலுவலகம், சென்னை-600 005.

18/4

<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு வணிகர் நல வாரியம் – வணிகர் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளுடன் திருமண உதவித் தொகை மற்றும் விபத்துக்கால இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத்(டி2)துறை</u>

அரசாணை (2டி) எண்.57

நாள்: 16.11.2021
பிலவ, ஐப்பசி–30
திருவள்ளுவர் ஆண்டு 2052.

Additional Commissioner (Non-GST) Chepauk 18 NOV 2021 Chennai-600 005 Commissioner of Commercial Taxes

படிக்கப்பட்டது:

முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.வநவா/69/2021, நாள் 14.09.2021.

*****

ஆணை:–

06.09.2021 அன்று நடைபெற்ற வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களாக உள்ள வணிகர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இனி வருங்காலங்களில், திருமண உதவித் தொகையாக ரூ.10,000/– வழங்கப்படும். மேலும், விபத்தில் பாதிக்கப்படும் உறுப்பினர்களுக்கு நிரந்தர உடல் உறுப்பு இழப்பு ஏற்படும் நேர்வுகளில் விபத்துக் கால இழப்பீட்டுத் தொகையாக ரூ.25,000/– வழங்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்த முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் அவர்கள், கீழ்க்காணும் நிபந்தனைகளை வரையறுக்கலாம் என பரிந்துரைத்துள்ளார்:–

I. வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள வணிகர்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.10,000/– வழங்குவதற்கான நிபந்தனைகள்:–

(i) வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினராகப் பதிவுபெற்று ஓர் ஆண்டு முழுமை பெற்றிருக்க வேண்டும்.

Scanned with CamScanner

(ii) உறுப்பினர் 2 முறை மட்டுமே பயன்பெற தகுதியுடையவர்.

(அ) உறுப்பினர் திருமணம்.

(ஆ) உறுப்பினரின் மகள்/மகன் திருமணம்.

(இ) உறுப்பினர்(பெண்)/உறுப்பினரின் மகள் கைம்பெண் திருமணம்.

II. விபத்துக் கால உதவித் தொகையாக ரூ.25,000/- பெறுவதற்கான நிபந்தனைகள்:-

(i) வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினராகப் பதிவு பெற்று ஓர் ஆண்டு முழுமை பெற்றிருக்க வேண்டும்.

(ii) விபத்து நேர்கையில்

(அ) கை / கால் விரல்கள் இழத்தல்.

(ஆ) கை / கால் இழத்தல்.

(இ) கண் பார்வை இழத்தல்.

(ஈ) தீ / அமிலத்தால் உடல் 60 சதவீதம் பாதிக்கப்படுதல்.

3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, மேலே பத்தி 2-இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, வணிகர் நல வாரியத்தின் நிரந்தர உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.10,000/- மற்றும் விபத்தில் பாதிக்கப்படும் உறுப்பினர்கருக்கு நிரந்தர உடல் உறுப்பு இழப்பு ஏற்படும் நேர்வுகளில் விபத்துக் கால இழப்பீட்டுத் தொகையாக ரூ.25,000/- வழங்கப்படும் என அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணை உடனடியாக அமலுக்கு வருகிறது. இதற்கான செலவினம் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதியில் மேற்கொள்ளப்படும்.

4. இது குறித்த, தொடர் நடவடிக்கை முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையரால் மேற்கொள்ளப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
கூடுதல் ஆணையர்/முதன்மைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை-5.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned with CamScanner